கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

இரண்டாம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2014/2015 (யூன் 2017)

LIBRARY 21 EASTERN UNIVERSITY, SRI LANKA

# FAS 2213 Western Architecture

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி–I இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும் பகுதி-II இல் இருந்து மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி – I

01. மேலைத்தேய கட்டடக்கலையை உதாரணமாகக் கொண்டு கட்டடக்கலையைத் தீர்மானிக்கும் காரணிகளுள் பின்வருவனவற்றை விளக்குக.
   I. பண்பாடு
   II. புவியியல்

02. "கூறுகளைக் கொண்டு நிர்மாணிக்கப்படுவதே கட்டடம்" கட்டடக்கலைக் கூறுகளின் பங்களிப்பை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.
   I. தொழில்நுட்பமும் கட்டடக் கூறுகளும்
   II. அழகுக்கான கட்டடக் கூறுகள்
   III. கட்டடத்தில் கூறுகளின் பயன்பாடு

03. கிறிஸ்தவக் கட்டடக்கலையை பின்வருவனவற்றின் அடிப்படையில் விளக்குக.
   I. பசிலிக்காவைப் (Basilica) பின்பற்றிய கிறிஸ்தவக் கட்டடக்கலை மரபு
   II. கிறிஸ்தவக் கட்டடக்கலை மரபைப் பறைசாற்றும் கோதிக் (Gothic) கட்டடக்கலை மரபு
   (III) கிறிஸ்தவ மரபும் கிறிஸ்தவக் கட்டடங்களும்

(1x20x2=40)

## பகுதி – I

04. எகித்தியக் கட்டடங்களில் அச்சமுகத்தின் பண்பாடு வெளிப்படுத்தப்பட்டமைதான் அதன் சிறப்புக்குக் காரணம் என்பதை ஏற்றுக்கொள்வீரா? உமது விடைக்கான காரணங்களை நியாயப்படுத்துக.

05. கிரேக்கக் கட்டடக் கலையின் அழகியல் அம்சங்களை விளக்குக.

06. உரோமானியக் கட்டடங்கள் அச்சமுகத்தின் வாழ்வியலை அடிப்படையாகக் கொண்டிருந்தன என்பதனை உதாரணம் காட்டி நிறுவுக.

07. கைத்தொழில் புரட்சியால், தோன்றிய சமூக மாற்றமும் அறிவியல் வளர்ச்சியும் ஐரோப்பாவில் நவீன கட்டடங்கள் தோன்றக் காரணமாக இருந்தது என்பதை விபரிக்குக.

(1x20x3=60)